## கம்பனிகள் நிதியம் - 2017

கம்பனிகள் நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிதியத்தின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 479(6) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறிய நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனிகள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனிகள் நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனிகள் நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

---

(i) நிறுவனத்தின் கொள்கை அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதாக இருந்த போதிலும், திறைசேரி உண்டியல் வட்டி வருமானம் மற்றும் வருடாந்த அறிக்கை கோவையிடல் வருமானம் மற்றும் வருடாந்த அறிக்கை கோவையிடல்களின் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ii) திறைசேரி பிரதி செயலாளருக்கு வழங்கப்பட்ட ரூபா 1,700,000,000 தொகையில் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 416,939,230 தொகை ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன் சேமிக்கப்பட்ட தொகையான ரூபா 1,283,060,770 நடைமுறையல்லாச் சொத்தாகக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக முற்பணமாக நடைமுறைச் சொத்துக்களில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

---

(i) ஆண்டின் மிகை ரூபா 572,934,730 ஆக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது செயற்பாட்டு மிகையாக ரூபா 573,305,228 தொகை ஈடுபடுத்தப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்தவை தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 370,498 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) முன்னைய ஆண்டிற்காகச் செய்யப்பட்ட சீராக்கம் ரூபா 523,000 தொகை செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த காசுப்பாய்ச்சல் சீராக்கப்பட்டிருந்ததுடன் தொழிற்படு மூலதன வித்தியாசத்தின் கீழ் அட்டுறு செலவின வேறுபாடு ரூபா 161,202 தொகை அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது,

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 24,529,385 தொகையான கிடைக்க வேண்டிய திறைசேரி பிணைமுறி வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக மிகை மற்றும் பெறவேண்டிய வட்டி வருமானம் வரை இரண்டும் அதே பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் கட்டிட திரண்ட பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 1,086,156 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 ஆம் ஆண்டின் போது கணனி முறைமையொன்று தாபிப்பதற்காக ஒப்பந்தகாரக் கம்பனிக்கு வழங்கப்பட்ட ரூபா 1,520,000 தொகையான முதலாவது தவணைப்பணம் நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறை வேலையின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணமாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஈ) புகையிரதத் திணைக்களத்தினால் அவர்களுக்குச் சொந்தமாக மருதானை டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தையில் தற்போது கம்பனித் தொகுதிக் கட்டிடம் அமைந்துள்ள 0.1408 ஹெக்டேயர் காணி கம்பனிகள் பதிவாளருக்கு 2015 ஆகஸ்ட் 13 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) முன்னைய ஆண்டின் அட்டுறு செலவினம் ரூபா 336,555 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்த தவறை திருத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 523,000 தொகை திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏனைய செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டில் திரண்ட நிதியம் மற்றும் ஏனைய செலவினம் என்ற இரண்டு கணக்குகளும் ரூபா 186,445 இனால் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) வெற்றியளிக்காமையினால் இடைநடுவில் நிறுத்தப்பட்ட கணனி முறைமைக்காக செலவிடப்பட்ட ரூபா 13,268,449 தொகை 2014 ஆம் ஆண்டின் போது நடைமுறை வேலையின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக உரிய சொத்துக் கணக்கில் மூலதனமாக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 6,927,900 தொகையான பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) முன்னைய ஆண்டின்போது தேறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 262,681,731 பெறுமதியான திறைசேரி பிணை முறிகள் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்ததனால் கிடைத்த மிகையான திறைசேரி பிணைமுறிகள் முதிர்ச்சியடையும் போது தேறிய மூலதன இலாபமான ரூபா 83,730,684 தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் திறைசேரி வட்டி வருமானத்தில் வேறாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டம் 8 ஆம் உபபிரிவு மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் மேலதிகம் 13 இன் பிரகாரம் ரூபா 57 மில்லியன் தொகையான மென்பொருட்கள் பெறுகைகளின் ஒப்பந்தம் கையளித்தல் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு சேவைக்காக தகைமை பெற்ற ஒப்பந்தகாரர் ஒருவரைத் தெரிவு செய்தல் போன்ற பெறுகை செயற்பாடுகளிலும் கேள்விதாரர் பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யும் தேவை காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2016 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் வார இறுதியின் போது பொதுமக்கள் சேவைக்காக அலுவலகத்தை திறந்து வைப்பதற்காக ஊக்குவிப் படியொன்றைச் செலுத்துவதற்காக கம்பனிகள் பதிவாளரின் 2016 ஒக்தோபர் 19 ஆந் திகதிய ROC/HC/15 ஆம் இலக்க கடிதத்தில் அமைச்சுச் செயலாளரின் மூலம் நிதி அமைச்சின் செயலாளருக்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருந்தது. 2016 ஒக்தோபர் 28 ஆந் திகதிய DMS/1122 ஆம் இலக்க கடிதத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இது தொடர்பாக தாபன பணிப்பாளர் நாயகத்திற்கு எதிர்கால நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டிருந்தது. எனினும், அது தொடர்பாக இதுவரையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அல்லது தாபன பணிப்பாளர் நாயகத்தினால் எந்தவொரு பதிலும் அனுப்பப்படாதிருந்ததுடன் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஊக்குவிப்புப் படி செலுத்துவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 9,938,140 தொகை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 3.1 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிசார் விளைவுகள் ரூபா 572,934,730 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 408,130,934 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 164,803,796 இனால் அதிகரித்திருந்ததுடன் அந்த அதிகரிப்பிற்கு திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைமுறிகள் என்பவற்றின் வட்டி ரூபா 103,962,700 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை நிதி மிகையில் சீரான அதிகரிப்பைக் காண்பித்தது. ஊழியர் ஊதியம், மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது நிறுவனத்தின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டில் ரூபா 356,763,319 முதல் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 596,350,650 வரை அதிகரித்திருந்தது.

## 3.2 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் வெளித்தரப்பினரால் கம்பனிப் பதிவாளருக்கு எதிராகவும், கம்பனிப் பதிவாளரால் வெளித்தரப்பினருக்கு எதிராகவும் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்படுநிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக கம்பனிகளின் பதிவு, கம்பனி ஆண்டறிக்கை பதிவு மற்றும் கம்பனியின் நிதி அறிக்கை பதிவு என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்து கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பணிகள் | பௌதீக செயல்முன்னேற்றம் | | நிதிசார் செயல்முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | 2017 | 2016 | 2017 | 2016 |
| கம்பனியின் ஆண்டறிக்கை பதிவுசெய்தல் | 34,593 | 36,955 | 207,375,000 | 184,608,500 |
| நிதி அறிக்கை பதிவு செய்தல் | 2,215 | 2,162 | 4,428,000 | 2,162,000 |
| புதிய கம்பனி பதிவு செய்தல் | 9,782 | 8,218 | 47,796,000 | 127,005,000 |
| கம்பனியின் செயலாளர்களைப் பதிவு செய்தல் | 817 | 701 | 4,285,000 | 1,815,000 |
| உறுதிப்படுத்திய பிரதிகள் விநியோகம் | 57,400 | 57,556 | 58,373,964 | 29,536,300 |
| கம்பனியின் கோவைகளைப் பரீட்சித்தல் | 10,580 | 12,674 | 10,580,070 | 6,337,040 |

(i) 1990/12 ஆம் இலக்க 2016 ஒக்தோபர் 25 ஆந் திகதியில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் மூலம் கம்பனிகளின் (கட்டணம்) திருத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2017 சனவரி 01 ஆந்திகதி முதல் அமுல்படும் வகையில் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் கட்டணம் திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக இந்த ஆண்டின் வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது அதிகரித்திருந்தது. கட்டண அதிகரிப்பு வருமானம் உயர்வடைந்து சென்றமைக்கு காரணமாக இருந்தது.

(ii) 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் கட்டணம் திருத்தம் செய்யப்பட்டிருக்கும் போது அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 2016 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட கட்டணத்தை அடிப்படையாகக் கொண்டு அறவீடுகள் இடம்பெற்றமையால் 87 சந்தர்ப்பங்களில் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட கம்பனிகளின் கட்டணம் ரூபா 87,000 இனாலும், 210 சந்தர்ப்பங்களின் போது குறைவிதிப்பு தொடர்பான சான்றிதழ் விநியோகிக்கும் கட்டணம் ரூபா 519,000 இனாலும் குறைவாக அறவிடப்பட்டிருந்தது.


(iii) 2007 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை பதிவு செய்துள்ள மொத்த கம்பனிகளின் எண்ணிக்கை 72,865 ஆக இருந்ததுடன் கூட்டிணைப்பின் பின்னர் ஆண்டறிக்கை கோவையிடப்பட வேண்டிய காலஎல்லையில் எந்தவொரு ஆண்டறிக்கையும் கோவையிடப்படாத கம்பனிகளின் எண்ணிக்கை 16,148 ஆகும். மீண்டும் பதிவு செய்யப்பட்ட 25,071 கம்பனிகளுக்கிடையே 2,555 கம்பனிகள் குறித்தகால எல்லையில் ஆண்டறிக்கையை கோவையிலிட்டிருக்கவில்லை.

3,485 கம்பனிகளின் பெயர்கள் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 2,715 கம்பனிகளின் பெயர்கள் ஆண்டறிக்கை கோவையிடப்படாமையின் காரணமாகவே பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெயர் பதிவழிக்கப்பட்டமையால் நிதியம் இழந்த வருமானம் ரூபா 33,911,333 ஆகும்.

(iv) நிதிப்பிரமாணம் 128(2)(உ) மற்றும் 2015 யூலை 20 ஆந்திகதிய 01/2015 ஆம் இலக்க அரசிறைக் கொள்கை சுற்றறிக்கையின் 04(அ) மற்றும் (ஆ) பந்திகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2007 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதிவரை நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,082,420,000 தொகையான நிலுவை வருமான மீதியில் 03 வருடங்களை விட ரூபா 507,008,000 தொகையும், 03 வருடங்களுக்குக் குறைவான ரூபா 575,412,000 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இந்த நிலுவை மீதியை அறவிடுவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று நிதியத்திடம் காணப்படவில்லை.

(v) கம்பனிச் சட்டத்தின் 170(1) ஆம் பிரிவின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை 7,468 ஆக இருந்த போதிலும், உள்ளபடியாக பதிவு செய்துள்ள கம்பனிகளின் எண்ணிக்கை 2,215 மாத்திரமாகும். எனினும், அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிதி அறிக்கைகள் பதிவுசெய்ய வேண்டிய கம்பனிகளை இனங்கண்டு அந்த அறிக்கையை திணைக்களத்தில் பதிவு செய்வதற்குரிய வேலைத்திட்டமொன்று திணைக்களத்திடம் காணப்படவில்லை.

(vi) ஆண்டறிக்கை கோவையிடலைப் புறக்கணித்த கம்பனிகளின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்திருந்ததுடன் அது தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.




(ஆ) கம்பனிச் சட்டத்திற்கு இணங்க வரையறுக்கப்பட்ட கம்பனிகள் பதிவு செய்தல் மற்றும் அதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க பதிவு செய்த கம்பனிகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் அதன் பிரகாரம் செயற்படுவதை கண்காணிப்பதற்கும், அவ்வாறு செயற்படாத சந்தர்ப்பங்களின் போது கம்பனிச் சட்டத்தினால் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் செயற்பட்டு பதிவுசெய்த கம்பனிகளின் நடவடிக்கைகளை கம்பனிச் சட்டத்தினால் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் கம்பனிப் பதிவாளர் நாயகத்திற்கு கம்பனிச் சட்டத்தில் கையளிக்கப்பட்டுள்ள நியதிச்சட்ட பணியாக இருந்த போதிலும், கம்பனிகளின் நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதற்காக செயற்பாட்டு வேலைத்திட்டமொன்று திணைக்களத்திடம் காணப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுத்திகரிப்பு சேவைக்காக 2017 ஏப்ரல் 01 முதல் 2017 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரிய மேற்பார்வை உத்தியோகத்தர், தொழிலாளர்கள் மற்றும் ஏனையவர்கள் என்ற தொகுதிகளில் இணங்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை சேவையில் ஈடுபடுத்துவதற்கு ஒப்பந்தக் கம்பனி தவறியிருந்ததுடன் சில மாதங்களில் சேவையில் ஈடுபடுத்தாத ஊழிய நாட்களின் எண்ணிக்கை 11 முதல் 61 வரை விரிவான வீச்சில் பரவியிருந்தது.

(ஆ) 2015/2016 ஆம் ஆண்டுகளுக்கான பாதுகாப்பு சேவை உடன்படிக்கை 2016 யூலை 31 ஆந் திகதி முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் போது, 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையும் சில சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்தக்காலம் நீடிக்கப்பட்டு நடாத்திச் செல்லப்பட்டதுடன் கணக்காய்வுத் திகதியான 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தக்காலத்தை நீடிப்பதற்கோ அல்லது புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடவோ இன்றி அந்த சேவைகளை வழங்குவதற்கு உரிய ஒப்பந்தக்கார கம்பனிக்கு சந்தர்ப்பம் வழங்கியிருந்தது.

(இ) நிதியச் செயற்பாடுகளை முறையாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான கணனி முறைமையொன்று 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஸ்தாபிப்பதற்கு தவறியிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 இன் ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் சகல அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டில் உரிய கம்பனிகள் பதிவாளர் திணைக்கத்தால் தமது விடயப்பரப்பின் கீழ் கொண்டுவரப்படுகின்ற பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது என்பது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருந்த போதும், ஆண்டு 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பான தெளிவுபடுத்தலின் அடிப்படையில் தமது விடயப்பரப்பின் பிரகாரம் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் கண்டறியப்படவில்லை.

## 5.2 தீர்த்து வைக்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

2016 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்களுக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| அறிக்கைகளின் பந்தியுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) 4.3 ஆம் பந்தி | கம்பனிகளைப் பதிவு செய்யும் செயற்பாடுகளை கணனி மயப்படுத்தும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா 88,812,207 தொகையான ஒப்பந்தம் 2014 சனவரி 24 ஆந் திகதி ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. குறித்த உடன்படிக்கைக் காலத்தில் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு |

தவறியமையின் அடிப்படையில் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் செயற்திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. அதுவரையிலும் ஒப்பந்தகாரருக்கு கம்பனியின் நிதியத்திலிருந்து ரூபா 13,268,449 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டு வரையில் சந்தைப் பெறுமதியின்றிய 2006 ஆம் ஆண்டில் ரூபா 90,275,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 10 இன் 3,000,000 முன்னுரிமைப் பங்குகளும், ரூபா 10 இன் 6,275,000 சாதாரண பங்குகளும் கொள்வனவு செய்யப்பட்டு பெறுமதி நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் அப்பெறுமதியால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.

(ஆ) 4.4 ஆம் பந்தி

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பணிகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றும் போது கம்பனிகள் பதிவாளரால் மேற்கொள்ளப்படுகின்ற சகல செலவினங்களும் நிதியத்திலிருந்து செலவிட முடியமாக இருந்த போதிலும், கம்பனிச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட செலவினத்தின் கீழ் கொண்டுவரப்படாமல் நட்டமடைந்து காணப்பட்ட வரையறுக்கப்பட்ட கம்பனிக்குரிய பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தின் வேண்டுகோளின் பிரகாரம் 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 90,275,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2017 யூன் 30 ஆந் திகதி வரை இந்த முதலீட்டிலிருந்து எந்தவொரு நலனும் கம்பனிகள் நிதியத்திற்கு கிடைக்கப்பெறாதிருந்ததுடன் உரிய கம்பனி வங்குரோத்து அடைந்தமையினால் அதனைக் கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதனல் மேற்கூறப்பட்ட முதலீட்டுத் தொகைக்குரிய உரித்துக்கள் அல்லது முதலீடு செய்யப்பட்ட பணத்தை மீண்டும் கம்பனி நிதியத்திற்கு பெற்றுக்கொள்ளல் நிச்சயமற்றதாகக் காணப்பட்டது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வாளரை உள்ளடக்கிய மூன்று உத்தியோகத்தர்களைக் கொண்ட திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 2017 ஆம் ஆண்டில் 03 கணக்காய்வு ஐயவினாக்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்த்த விடயப் பரப்புக்கள் மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை.

### 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

#### 6.2.1 பெறுகைகள்

அரசாங்கப் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையினதும் மதியுரை பெறுகைகள் வழிகாட்டிக் கோவையினதும் பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 57 மில்லியன் செலவில் கணனி மென்பொருள் கொள்வனவு செய்தல் தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மதியுரை பெறுகைகள் குழுவிலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவிலும் நியமிக்கப்பட்ட சகல அங்கத்தவர்களும் சகல பெறுகைகள் குழு உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களும் மதியுரைச் சேவை பெறுகை வழிகாட்டிக் கைநூலின் 2.8 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் அந்த திணைக்களங்கள் தொடர்பாக விருப்பத்தைத் தெரிவித்து கூற்றொன்று சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மதியுரைச் சேவை, வழிகாட்டிக் கோவையினதும், வழிகாட்டிக் கைநூலினதும் 5.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கால அட்டவணையை விஞ்சி 64 வாரங்கள் இந்த பெறுகைக்காக எடுக்கப்பட்டிருந்தது.

(ii) இந்த பெறுகைகளின் போது விருப்பத்தை வெளியிட்ட நபர்களுக்கிடையே 07 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களிடமிருந்து தொழில்நுட்ப மற்றும் நிதிசார் முன்மொழிவுகளைப் பெற்று, மதிப்பீடு செய்ததன் பின்னர் ஆகக் குறைந்த புள்ளி எல்லையான 70 ஐ விஞ்சிய தகைமைகளைப் பூர்த்திசெய்த ஒரு கேள்விதாரர் இருக்கும் போது அவரின் நிதி முன்மொழிவுகள் திறக்கப்படாமல் மீண்டும் ஒரு தடவை அந்த ஏழு கேள்விதாரர்களிடமிருந்தும் தொழில்நுட்ப மற்றும் நிதிசார் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு பெறுகைகள் ஒரு தீர்மானித்திருந்தது.

(iii) பெறுகைகள் குழு அங்கத்தவர்களினால், தகைமை பெறும் ஆகக் குறைந்த புள்ளி எல்லையை குறைப்பதற்கும், புள்ளிக் கட்டமைப்பை மாற்றுவதற்கும் ‘‘சமர்ப்பிப்பதற்கும்’’ இற்காக புள்ளி வழங்குவதை உள்ளடக்கியதாக மீண்டும் முன்மொழிவுகளைக் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டு 2016 யூலை 01 ஆந் திகதிய தேசிய பெறுகைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் ஆலோசனை கோரப்பட்டிருந்தது. தேசிய பெறுகைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் 2016 யூலை 04 ஆந் திகதிய NPC/Function/2016/01 ஆம் இலக்க பதில் கடிதத்தில் குழு எதிர்பார்த்த முறையில் செயற்பட முடியாதிருந்தமையும், ஆரம்ப சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப்பட்ட புள்ளி அளவை கவனத்தில் கொள்ளாமல், மீண்டும் அழைப்பு விடுப்பதற்கோ அல்லது மேலதிக புள்ளிகளை வழங்குவதற்கோ முடியாதிருந்தமை அந்த கடிதத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த ஆலோசகைகளை புறக்கணித்து மீண்டும் முன்மொழிவுகளைக் கோருவதற்கு மதியுரை பெறுகை குழு தீர்மானித்திருந்தது.

(iv) அதன் பிரகாரம் இரண்டாவது தடவை முன்மொழிவுகளைக் கோரும் போது ஆகக் குறைந்த புள்ளி எல்லை 70 முதல் 60 வரை குறைக்கப்பட்டிருந்தது. Key Professional குறிகாட்டிகளுக்காக வழங்கப்பட்ட புள்ளிகளின் அளவு 50 முதல் 25 வரை குறைக்கப்பட்டிருந்ததுடன் Presentation இற்காக 15 புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தது.

(v) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு இரண்டாவது தடவையில் பெற்றுக்கொண்ட தொழில்நுட்ப மதிப்பீட்டை எடுத்து வெற்றிகரமான கேள்விதாரராக தெரிவு செய்ததன் பின்னர் வழிகாட்டிக் கோவையின் 7.4.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ஆகக் குறைந்தது 5 நாட்களுக்குப் பின்னர் அல்லது போதியளவான காலம் வழங்கப்பட்டு பகிரங்கமாக நிதிசார் முன்மொழிவுகள் வெளியிடப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணாக ஆகக் குறைந்த காலம் வழங்கப்படாமல் அத்தினமே நிதிசார் முன்மொழிவுகளும் திறக்கப்பட்டு ரூபா 57 மில்லியன் தொகையான கேள்வி சமர்ப்பித்த கேள்விதாரர் வெற்றிகரமாத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். மதியுரைச் சேவை வழிகாட்டிக் கோவையின் 9.2.1(6) ஆம் பந்தியின் பிரகாரம் இயலுமானவரை

விரைவாக ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியிருந்த போதிலும், ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக 07 மாத காலம் எடுத்திருந்தது.

(vi) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், இந்த மென்பொருள் பெறுகைகள் செயற்திட்டத்திற்காக தகைமை பெற்ற மதியுரைக் கம்பனியால் ஒப்பந்த உடன்படிக்கை பதிவு செய்வதற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு 06 மாதங்கள் கடந்த பின்னரே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**(ஆ) பாதுகாப்பு சேவை மற்றும் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பாதுகாப்பு சேவை மற்றும் சுத்திகரிப்பு சேவைகளின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் முறையே ரூபா 6 மில்லியன் மற்றும் ரூபா 2 மில்லியன் தொகைகள் அதற்குரிய பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பாதுகாப்பு மற்றும் சுத்தகரிப்பு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக 2016 யூலை 31 ஆந் திகதி மற்றும் 2016 திசெம்பர் 14 ஆந் திகதிகளில் செய்திப் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு கூறுவிலை கோரப்பட்டிருந்த போதிலும் கேள்வி சமர்ப்பிப்பதற்காக 14 தினங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.11 ஆம் பந்தியின் பிரகாரம் கேள்விக் காப்பீடு பெற்றுக்கொள்வதற்கு கேள்விதாரர்களுக்கு அறிவித்திருக்கவில்லை.

(iv) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.10 ஆம் பந்தியின் பிரகாரம் செயலாற்றல் காப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான 03 வருமான விடயங்களில் 200 சதவீதம் முதல் 245 சதவீதம் வரையிலான வீச்சிலும், பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான 12 செலவின விடயங்களில் 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 07. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) கணக்கீடு | கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட இறுதிக் கணக்குகளுக்குரிய கணக்கீட்டுக் குறிப்புக்கள் தொடர்பாக விரிவான பட்டோலையொன்று சமர்ப்பிக்கப்படாமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிலுவை வருமானத்தை அறவிடல் | | ஆண்டறிக்கைகள் கட்டணத்தை அறவிடுவதற்காக குறித்துரைக்கப்பட்ட முறைமையொன்று நிறுவனத்தில் ஸ்தாபிக்கப்படாமை |
| (இ) | பெறுகை நடவடிக்கைகள் | | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் மதிப்பீட்டுக் குழு, பெறுகைகள் குழு, பெறுகைத் திட்டம் என்பன உரிய பிரகாரம் தயாரிக்காமை |
| (ஈ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | - | பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு முறையான கணனி முறைமையொன்று ஸ்தாபிக்கப்படாமை. |
| | | - | குறித்துரைத்த பிரகாரம் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட காலத்தில் ஆண்டறிக்கையை கோவையிடுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |